RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# அற இலக்கிய கல்விச் சூழலில் கலையும் பண்பாடும்

க. வசந்தகுமாரி [அ], ந. அமிர்தக்கொடி [அ, *]

[அ] தமிழ்த்துறை, பி.கே.ஆர் மகளிர் கலைக்கல்லூரி, கோபிசெட்டிபாளையம் 638478. இந்தியா,

# The Role of Art and Culture in the Educational Thought of Ethical Literature

K. Vasanthakumari [a], N. Amirthakodi [a, *]

[a] Department of Tamil, P.K.R. Arts College for Women, Gobichettipalayam - 638 476, India

*Corresponding Author:
amirthakodi3@gmail.com

**ABSTRACT**

Education may be regarded as the foundation of all human civilizations. In the earliest stages of human history, learning emerged through experience, as people acquired the knowledge necessary to obtain food, adapt to changing natural environments, and protect themselves from wild animals and other challenges. Thus, the process of learning originated from humanity's efforts to satisfy its basic needs. While other living beings have largely remained unchanged, human life has continually evolved through remarkable intellectual, social, and cultural transformations. Among the many factors responsible for this progress, education occupies a central and indispensable place. The primary objective of education is to guide human life by shaping ethical conduct, cultural values, occupational skills, social relationships, and economic well-being. It seeks to cultivate individuals who can manage every aspect of life with wisdom, discipline, and a deep appreciation of artistic and cultural traditions. In this regard, Tamil ethical literature provides profound educational insights that promote virtuous living and holistic personal development. Ethical literary works not only impart moral values but also nurture an understanding of art and culture as essential components of civilized life. Through their emphasis on righteousness, social responsibility, aesthetic appreciation, and cultural refinement, these texts serve as enduring guides for human conduct. This article examines the role of art and culture within the educational philosophy of Tamil ethical literature, highlighting how ethical teachings contribute to the cultivation of a disciplined, culturally enriched, and morally responsible society.

**Keywords:** social responsibility, Tamil society, human civilizations, cultural transformations

## முன்னுரை

வளமாக வாழ்ந்து நிறைவாக விடைபெறுதலே மனித வாழ்வியலின் நோக்கம். அந்நோக்கத்தின் பின்புலமாக செயல்படுவது சமூகம். சமூக கூட்டுணர்வே கலை மற்றும் பண்பாட்டு உணர்வுக்கும் காரணமாக விளங்கிற்று என்பதை சங்க இலக்கியங்களும் அற இலக்கியங்களும் பறைசாற்றுவதை நாம் பார்க்கிறோம். மனித கூட்டு வாழ்க்கையின் பலமே மன வளம். உடல், உயிர், உள்ளம் என மூன்றின் செயல்பாட்டிலும் மனம் தெளிவின்றேல் உடலும் உயிரும் பயன் பெறலாகாது. அம்மனதைச் சமுதாயத்தினூடே நல்லிணக்கமாக செம்மையாக விதைப்பது கல்விதான். அவ்வகையில் அற இலக்கியங்களில் காணலாகும் கல்விச் சூழலில் கலையும் பண்பாடும் பற்றி உணர்த்தும் பாங்கினை பின்வருமாறு அறியலாம்.

## அற இலக்கியங்கள்

காதல், வீரம், கொடை என தனி மனித புலன் உணர்வு வாழ்க்கையைப் பாடி புகழும் நெறியாக இருந்த சங்க இலக்கிய போக்கு சங்கம் மருவிய காலத்தில் மனிதனது நிலையாமையைப் பாடும் புது மரபு அக்கால சூழ்நிலையில் தேவையாக இருந்தது. ஆகவே அற நூல்கள் தோன்றின. அந்நூல்களாவன, அற நூல்கள் அடங்கிய தொகுப்பு நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். இப்பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அற நூல்களாக 11 நூல்கள் உள்ளன. அவை திருக்குறள், நாலடியார், பழமொழி, நான்மணிக்கடிகை, திரிகடிகம், சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை, ஏலாதி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக்காஞ்சி ஆகியவை ஆகும்.

## கல்வி பொருள்

கல்வி என்னும் சொல்லுக்கு பொருள் கல்லுதல். கல் என்னும் அடிச்சொல்லிருந்து கலப்பை என்ற பெயரும், கல்வி என்ற பெயரும் வந்தன. நிலத்தைக் கிளறுவதற்குக் கலப்பை பயன்படுவது போல கல்வி கல்லுதல் என்பது மனத்தைக் கிளறித் திருத்திப் பயன்படுத்துவதாகும் என்கிறார். கற்கும் கல்விக்கு பல பொருள்: அறிவு, கற்றல், நூல், வித்தை, பயிற்சி, காரணம், கலை, கேள்வி, என்று கௌரா தமிழ் அகராதி விளக்கம் அளிக்கிறது.

## அற இலக்கிய கல்விச் சூழலில் கலையும் பண்பாடும்

அன்றைய பழந்தமிழர்களின் வாழ்வியல் களம் இயற்கை கொஞ்சும் அமைதியான சூழலில் அமைந்திருந்தது. ஆனால் இன்றைய சூழலில் வாழும் மனிதன், மனிதன் அல்ல இயந்திர மனிதன் என்று சொல்லலாம். இதற்கு காரணம் நம் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் தெளிந்த நுட்பமும் வரம்புக்கு உட்பட்டதாக நிலை நிறுத்தும் சுய கட்டுப்பாட்டு அம்சம் இல்லாமையே காரணம். ஆகவேதான் திருவள்ளுவரும்

“கற்க கசடற கற்பவை கற்றபின்” (குறள்.391)

நமது அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்க்கும் எந்த ஒரு கற்றலையும் முழுமையாக முற்ற உணர்ந்து நமது உள்ளம் கசடற கற்று அதன்படி செயல்பட வேண்டும் என கூறுகிறார். அக் கற்றலே சிந்தனையை அகல உழுந்து மனதைப் பண்படுத்துகிறது. பண்பட்ட மனம் மெய்அறிவாகிய சமநிலை உணர்வை மேலோங்கச் செய்கிறது. அச்சமநிலை உணர்வே கலை உணர்வுக்கும் பண்பாட்டு உணர்வுக்கும் மடைமாற்றம் செய்கிறது.

கல்வி - அழகுக் கலையும் பண்பாடும்

“அழகின் சிரிப்பே அறிவின் விளக்கே” என பாவேந்தர் பாரதிதாசன் கூறுவது போல் உண்மையான அழகு அறிவின் வெளிப்பாடு தான். அவ்வழகு குறித்து விளம்பி நாகனாரும்,

“குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்” (நாலடியார். பொருள்.கல்வி.பா.14)

நீண்ட கருமையான கூந்தலழகும் அழகான கரையழகும் பூசும் மஞ்சள் அழகும் அழகல்ல மனதளவில் நல்லவர்களாக வாழ்கின்றோம், என்று நடுவு நிலைமையான மன ஊக்கத்தைத் தருகின்ற கல்வி அழகே உண்மையான அழகாகும்.

“இடைவனப்புந் தோள்வனப்பும் ஈடின் வனப்பும் “(ஏலாதி.74)

உடற்கட்டழகு அழகல்ல. சிக்கலான சூழ்நிலையில் விடை காணும் ஒருவனது எண்ணறிவும் எழுத்தறிவுமே அவனுக்கு அழகு. ஆகவேதான் திருவள்ளுவரும் “எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்” (குறள். கல்வி.392) எண்ணும் எழுத்தும் முகத்திற்கு அழகான கண் என்கிறார்.

இக்கருத்துக்களை நோக்கும்பொழுது கல்வி விதைத்த சமத்துவம் நிலவும் நடுவு நிலைமையான மனதுதான் உண்மையான அழகு. ஆகவே மனதின் கண் மாசிலன் அன்றி சமூக மரபுகளையும் பிற

மரபுகளையும் சமத்துவ நோக்கோடு போற்றுதல். என ஆளுமை மிக்க சமுதாயத்தைக் கல்வி வளர்த்தெடுக்கும்போது பண்பாட்டு சமுதாயம் உருவாகிறது.

## கல்வி-மருத்துவ கலையும் பண்பாடும்

மீவாசையில் மூழ்கி முக்குண பயப்பட்ட மக்களுக்கு நோய்கள் வருகின்றன. அதாவது ஆசையின் மிகுதியால் வரும் கவலை, அச்சம், சினம் ஆகியவற்றால் ஏற்படுவது. ஆகவே தான் பாரதியாரும் 'அஞ்ஞானம் அகற்றிடுவோம்' என்று கூறுகிறார் அஞ்ஞானம் என்று சொல்லக்கூடிய அறியாமை தான் அடிமைத்தனம். இந்த அடிமைத்தனம் தான் மனிதனை வீழ்ச்சியுறச்செய்கிறது. ஆகவேதான் விளம்பிநாகனாரும்.

"மம்மர் அறுக்கும் மருந்து" (நாலடியார். பொருள். கல்வி.பா.132)

இப்பாடலின் வழி ஒரு மனிதன் பல நூல்களைக் கற்று தெளிவடையும் பொழுது விரும்பத்தக்க நடத்தைகளும் பல பரிமான சிந்தனைகளும் ஊற்றிக் கொண்டே உருவெடுக்கும். அஃது அறிவு, சிந்தனை, மனம் என எல்லா நிலையிலும் பண்பட்ட பகுத்தறிவை வியாபித்து அறியாமை என்னும் உள நோயிலிருந்து விடுவிக்கும் மருத்துவக் கலையாக கல்வி விளங்குகிறது.

மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் உள்ள தொடர்பினை உணர்ந்து சமத்துவம், சகோதரத்துவம், ஒன்றே குலம் ஒருவனே தேவன், என்ற பண்பாட்டுச் சாயலைப் புகட்டுவதைக் கண்டுணரலாம்.

## கல்வி-மனவளக்கலையும் பண்பாடும்

"மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்" (திருமந்திரம்)

"ஆறறிவதுவே அவற்றோடு மனனே" (தொல்.1516)

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியும் ஐம்புல உணர்வுகளின் வாயிலாக அறிவைப் பெறுகின்றோம் அவ்வறிவு மனத்தால் அறியப்படுவது. மனதைச் செம்மையாக வைத்துக் கொண்டாலே யாதொரு தீங்கும் புகாது ஆகவே, மனதால் சிந்தித்து பகுத்து தெளிந்த செயலைச் செய்வதாலே நாம் மனிதர்கள் என்று சொல்லப்படுகிறோம். ஆனால் இன்று மனநலம் என்பது இன்றைய தொழில்நுட்பக் கவர்ச்சியால் மாணவ சமுதாயத்தில் பெரும் கலவர களமாக செயல்படுகிறது. இக்கலவரத்தைக் கல்வி எனும் ஆயுதத்தால் தான் வெல்ல முடியும் என்பதை கீழ்காணும் பாடல்கள் நமக்கு சான்றாக விளங்குகின்றன.

"தனக்கொன்று உறுவழி நிற்பது அறிவு" (நான்மணிக் கடிகை. பா.29)

தனக்கென்று துன்பம் வரும் பொழுது, தான் கற்ற கல்வி துணை நின்று தன் துன்பத்தை நீக்கும்.

"கற்றார் முன் தோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்று" (நான்மணிக் கடிகை.பா.8)

கற்றுணர்ந்தவர்கள் ஒரு செயலில் விரைவில் வெற்றி கிட்டவில்லையே என்ற முயற்சி துன்பம் அவர் உள்ளத்தில் ஏற்படலாகாது.

"கற்றான் தளரின் எழுந்திருக்கும்" (நான்மணிக் கடிகை.பா.73)

"ஊழையும் உப்பக்கம் காண்பர்."(குறள். 620)

முற்று முழுமையான கல்வி பெற்றவனுக்கு தளர்ச்சி ஏற்படும் போது அத்தளர்ச்சி கண்டு மயங்காமல் மேலும் மேலும் முயன்று உயர்வடைவான். இப்பாடல் கருத்துக்களை சிந்திக்கும் பொழுது கல்வி என்பது மனதைச் செம்மைப்படுத்தும் ஒரு கலை தான் .ஏனெனில் பண்பட்ட நிலத்தில் தான் பயிர் நன்கு விளையும். அது போல பண்பட்ட மனதில் தான் நல்ல அறங்கள், நற் சிந்தனைகள் மலரும். பல நல்ல நூல்களைக் கற்று தேறும் போது மனம் வளமை பெறுவதால் மனநலமிக்க முழு மனிதனை அடையாளம் காண கல்வி ஒன்றே விதையாகும்.

## கல்வி-ஞானக்கலையும் பண்பாடும்

“ஒவ்வொரு மனிதனுள்ளும் தெய்வீகத் தன்மையும் பூரணத்துவமும் உறைந்துள்ளது.அதை வெளியே கொண்டு வர வேண்டும் என்றால் அதற்கு கல்வியே சிறந்த வழி” என்பர் சுவாமி விவேகானந்தர் இவரின் கூற்றிற்கேற்ப விளம்பிநாகனாரும்

“கற்பக் கழிமடம் அஃதும்; மடம் அஃகப்” (நான்மணிக் கடிகை. பா.28)

ஒருவன் கற்க வேண்டிய நூல்களைக் கசடற கற்றால் அவன் அறியாமை குறையும், அறியாமை குறைந்தால் புல்லறிவு நீங்கி மெய்ந்நெறியாகிய ஞானநெறியில் தன்புகழை நிலைநிறுத்தி மறுமையில் வீட்டுலகம் புகுவான்.

“பன்னூலும் தேர்தற் பொருள பொருள்” (நான்மணிக் கடிகை.பா.50)

“சத்தமெய்ஞ் ஞானம் தருக்கம் சமயமே” (சிறுபஞ்சமூலம். 86)

இப்பாடல்களின் கருத்துக்களையெல்லாம் நோக்கும் பொழுது. ‘உன்னையே அறிவாய்’என்று சாக்ரடீஸ் கூறுவது இங்கு ஞாபகத்தில் வருகிறது. பல வேதங்களையும் பல நூல்களையும் கற்றுத் தேறும் ஞானம் நிறைந்த அறிவு ஒன்றே உண்மையான தெய்வம். தெய்வீக அறிவில் முதிர்ச்சி அடைய செய்யும் கல்வியே ஞானக்கலையாகும். மனித வாழ்வியலை இறை நிலைக்குக் கொண்டு செல்லும் பண்பாட்டுத்தளமாக விளங்குகிறது.

கல்வி-பேச்சுக்கலையும் பண்பாடும்

“கழறும் அவை அஞ்சான் கல்வி இனிதே” (இனியவை நாற்பது.பா. 12)

“கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே” (இனியவை நாற்பது பா 16)

பல நல்ல நூல்களைக் கற்கும் பொழுது மன துன்பங்கள் நீக்கி நெஞ்சினில் சுகம் உண்டாகும். நாம் கற்ற கல்வி நம்மை மட்டும் மகிழச் செய்வதோடு மட்டுமல்லாமல் கற்றறிந்தார் பேச்சினை அவையாரும் கேட்டு மகிழ்வர். அவ்வாறு அவை முன் அஞ்சாமல் கற்றுத் தெளிந்தார் முன் கல்வி கருத்துக்களை நயம்பட கூறுதல் இனிமையாகும். பேச்சாற்றல் மக்களைச் சிந்திக்க செய்து தளர்ந்து கிடக்கும் உள்ளங்களைச் சக்தி மிக்க ஆற்றலோடு நிமிர்ந்து நிற்கும் ஆளுமையை உருவாக்குகிறது. சமுதாயத்தை பண்பட்ட சமுதாயமாய் மாற்றி மக்களைத் தன்வசம் கட்டிப்போடும் பேச்சாளனைஒரு கலைஞன் என்றே குறிப்பிடலாம்.

## கல்வி-இன்ப கலையும் பண்பாடும்

மனிதன் தனித்து வாழ்பவன் அல்லன். அவனுக்குள் சமூகம்- சமூகத்துக்குள் அவன், என்று இணைத்துக் கொள்கின்ற நல்லிணக்க பண்பாடு மானிட அறமாகும். அறம் சார்ந்த வாழ்வே மனித பண்பாடாகும்.

“பெருமையுடையாரைப் பீடழித்தல் இன்னா” (இன்னா நாற்பது.பா. 27) கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் சான்றோர் பெருமக்கள் கூறும் அறிவுரைகள் பேச்சுகள் அமிழ்தம் போன்றது என்று கருதும் பண்பாட்டு மனோபாவம் தமிழ் மக்களிடையே வேரூன்றி இருந்தது. ஆகவே மனதிலும் செயலிலும் இன்பமுறமும் ஆக்கமுறமும் கற்றறிந்தாரை ஒழுகினர்.

“கற்றறிந்தார் கேண்மை நுணியின் கரும்பு தின்றே” (நாலடியார்.138)

பல நூல் கற்ற கற்றறிந்தவர்களோடு கொண்ட நட்பானது கரும்பை நுனியில் இருந்து அடிவரை உண்பது போன்றது. அவர்களோடு பழகப் பழக நம் அறிவிலும் சிந்தனையிலும் வியத்தகு மாற்றங்களை நாம் உணரும் பொழுது கற்றோரிடம் கொண்ட நட்பு, மனதில் இன்பத்தை ஊற்றும் இன்பக்கலை எனக் கூறுவது பாராட்டத்தக்கது. கல்வி மனித உள்ளங்களை மேம்படுத்தும்

கலையாகவும் சமுதாயத்தில் சமத்துவம், சகோதரத்துவம் என்ற பண்பாட்டை விதைக்கும் விதையாகவும் நமக்கு போதிக்கின்றன.

## முடிவுரை

"துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேண்டும்" என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கூறுவது போல் கல்வி, அறிவை வளர்ப்பதோடு பண்படுத்தவும் செய்கிறது. பண்பட்ட மனிதனே பல்லாண்டு நிலைத்த புகழைப் பெறுவான் ஆகவே கற்போம், பார் போற்ற பண்பாட்டோடு வாழ்வோம்.

## References

சங்கத்தமிழியல் ஆய்வில் 'ஞானி'யின் சில பார்வைகள் முனைவர் அ.தௌ.ஃபீக் ரமீஸ் உதவி பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி-20, தமிழ்நாடு, இந்தியா.(ஆய்விதழ் செம்மொழித் தமிழ்-RAJA PUBLICATIONS, No.10,(upstair), Ibrahim Nagar, khajamalai, Tiruchirappalli-620 023, Tamilnadu, India.

இந்தியக் கலைச்செல்வம் பாஸ்கரத் தொண்டைமான், தமிழ் வளர்ச்சி இயக்ககம், எழும்பூர், சென்னை-600008.

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மயிலை சீனி. வேங்கடசாமி, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை-600005.

தமிழகச் சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு, முனைவர் கு. சேதுராமன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41,-பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600050.

நீதிக் களஞ்சியம், புலவர் குழந்தை, தமிழ் வளர்ச்சித் துறை, எழும்பூர்,சென்னை 600008.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும், அறிஞர் ச.வே.சுப்பிரமணியம், மணிவாசகர் பதிப்பகம் 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 600108.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License